561.

சி.சாமி 'சாம்புகா! நல்லது!' என்று சொல்லிவிட்டு,
சாமி இருவரும் சென்று, சாப்பிட்டார்கள்.
பிறகு, சின்னண்ண சாமி தாம்பூலம் போட்டுக்கொண்டு
வெளியில் வந்து, சாம்புகனை கூப்பிட்டு, 'நீலாவை,
நன்றாக தேய்த்து சுத்தம் செய்து, மணி மண்ட
பவாசலில் கொண்டு வந்து, கட்டச் சொன்னார்.
வெள்ளிக்கிழமை விடிய ஐந்து நாழிகைக்கு
முன், பார்வதியாள் எழுந்து, அண்ணனிடம் ஓடி
வந்து 'அண்ணா! இன்று, உங்களுக்கு நானே
சாதம் சமைத்து, என்கையால் உங்களுக்கு
பரிமாறுகிறேன்; நீங்கள், போனால் திரும்பி
வரமுடியாது என்று, எனக்கு தெரிகிறது!

சி.சாமி 'ஏன், தங்கமே! அப்படியெல்லாம் நினைக்கிறாய்?
பன்றியைக் கொன்று விட்டு, உடனே திரும்பி
வந்து விடுவோம்.'

பார்வதி 'அண்ணா! நீங்கள் திரும்பி வரமாட்டீர்கள்
என்று, எனக்குத் தெரிந்து விட்டது! அதனால்,
இன்று நானே உங்களுக்கு சாதம் சமைத்து
ப்போட வேண்டுமென்று,' பார்வதியாள் உடனே
சாதம் சமைத்து, அண்ணர் இருவருக்கும்
சாதம் போட்டாள். இருவரும், சாப்பிட்
டபின்,

பார்வதி. 'அண்ணா! உங்கள் இருவரையும் பல்லக்கில் வைத்து, ஊர்வலத்துடன், உங்கள் அழகை நான் பார்க்க வேண்டு'மென்று, மாதர்களை விட்டு பல்லக்கை அலங்காரம் செய்து கொண்டு வரச் சொல்லி, அண்ணர் இருவரையும் பல்லக்கில் வைத்து, அரண்மனையை சுற்றி ஊர்வலம் வரும்போது,

பார்வதி. 'அண்ணா! உங்கள்,

பாட்டு

"பல்லு நல்லோ பல்லு வரிசையைத்தான்
நான் பார்த்திலையே அண்ணா..
காண்பேனா இனி காண்பேனா
சொல்லு நல்லோ சொல்லு வரிசையைத்தான்
நான் கேட்டதில்லை அண்ணா..
காண்பேனா இனிக் காண்பேனா
தங்க நல்லோ தங்கத் திரு முகத்தை
நான் துனித்திருந்து அண்ணா
காண்பேனா இனி காண்பேனா
பொன்னு நல்லோ அண்ணா திரு முகத்தை
நான் பூமியிலே இங்கு
காண்பேனா இனி காண்பேனா"

[struck through]. 'அண்ணா! நீங்கள், வீரமலைக் காட்டில், வினைகாரன் நீமையில், நீங்கள் இரண்டு பேரும் இறந்து விட்டால்! எனக்கு, யார் வந்து சொல்வார்கள்! எனக்கு, ஐந்து அடையாளம் வைத்து விட்டுப் போங்கள், நான், அதைப் பார்த்து தெரிந்து கொள்வேன், அண்ணா! வென்று, சொன்னியபடி கூறுகின்றாள், அங்கே காந்தேரி வாடுகிறாள்.

சி.சாமி.' ஏன் தங்கமே! இப்படி கூறுகின்றாய்? என்ன, அடையாளம் வேண்டும், சொல்?' 252

253
பார்வதி. (பாட்டு)

"மாங்காய் அடையாளமும்
மல்லிகைப்பூ அடையாளமும்
தேங்காய் அடையாளமும்
திருவிளக்கு அடையாளமும்
செம்புச்ஜலமும் வைத்து
சேர்ந்து சந்தன அடையாளமும்"

'அண்ணா! இவையெல்லாம், வைத்து விட்டுப் போங்கள்' என்றாள்.

சி.சாமி' ஏன், தங்கமே! இந்த அடையாளங்களில், உனக்கு, என்ன சோதனை தெரியும்?'

பார்வதி.' அண்ணா! நீங்கள் வீரமலைக் காட்டில், இறந்து

564.

விட்டால்,

பார்வதி: பாட்டு

"மாங்காய் அழுகி விடும்
மல்லிகைப் பூ வாடி விடும்
தேங்காய் உடைந்து விடும்
திருவிளக்கு அணைந்து விடும்
செம்புச் ஜலம் குறையும்
சேர்ந்து சந்தனம் காய்ந்து விடும்"

— . — . — . — . — . — . —

'அண்ணா! நீங்கள் இறந்து விட்டால், அடையாளம், இந்த மாதிரி மாறி விடும்!

சி.சாம்.' சரி தங்கமே! அப்படியே, செய்வோம்' என்று மேற்ச் சொன்ன அடையாளங்களை வைத்து விட்டு, சாமி இருவரும் கச்சை கட்டும் மாளிகைக்கு சென்று, இருவரும் கச் செடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு, பொன்னுருக்கி மாளிகைக்கு சென்று கத்தியை எடுத்து, இடுப்பில் சொருகிக் கொண்டு, வெளிமுகம் வந்தார்கள்.

சி.சாமி.' அடே, சாம்புகா! ஆயிரங்கிராமத்து குடிபடைகளும் வந்து விட்டதா?'

சாம்புகன்.' ராஜாவே! ஆயிரங்கிராமத்திலும், ஒருவரும் தவறாமல், பட்டிக் கொரு நாயும், பண்ணையத்துக்கு ஒரு ஆளும், வந்து விட்டார்கள்.

~~[illegible]~~ ராஜாவே!

துலுக்கர் படை ஒரு கோடி.
மலுக்கர் படை ஒரு கோடி.
மராட்டியர் படை ஒரு கோடி.
பட்டுநூல்க்காரர் படை ஒரு கோடி.
குடிபடைகள் ஒரு கோடி. ஆக, ஐந்து
கோடி படையும் பட்டிக்கு ஒரு நாயும்,
பண்ணையத்துக்கு ஒரு ஆளும், கட்டிச்
சோறும் கைத்தடியும் தவறாமல் வந்து,
சேர்ந்து படை பொருந்தியிருக்குது
செம்பூலாங் கானகத்தில்,
கூடிப்படை பொருந்தியிருக்குது
கொக்குளந்தான் பள்ளத்தில்! என்று,
சாம்புகன் சொன்னதும், சின்னண்ண சாமி
சந்தோசமடைந்து, 'அண்ணனைக் கூட்டி
க் கொண்டு, இருவரும் பார்வதியாளிடம்
போய் 'அம்மா, தங்கமே! நாங்கள் போய்
வருகிறோம்! எங்களுக்கு,
வாழ்த்தி வரம் கொடம்மா! மந்திர வாள்,
கை, கொடம்மா!
போத்தி, வரம் கொடம்மா! பொன்னருவாள் 253
264 கை, கொடம்மா!' என்றார்கள், சாமி இருவரும்.

பார்வதி: 'அண்ணா! நீங்கள், கத்தியை இடுப்பில் வைத்து
க் கொண்டு, என்னை வாழ்த்தி மந்திரவாள்

கை, கொடு, என்று என்னிடம் கேட்டால், நான்
எப்படிக் கொடுப்பது? அண்ணா! நீங்கள் போய்
விட்டு திரும்பி வருவதாக இருந்தால், முன்
னமே கத்தியை எடுத்துக் கொடுக்க, என்னை
கைப்பிடித்திருப்பீர்கள்! அண்ணா! நீங்கள், வீர
மலைக்காட்டுக்குப் போய் விட்டு, இனி திரு
ம்பி வரப்போவதில்லை, நான் பார்க்கப்போ
வதுமில்லை. யென்று, பார்வதியாள் அண்ணரைக்
கட்டிப்பிடித்துக் கொண்டு, அழுதாள்.

சி. சாமி. 'தங்கமே! அழுக வேண்டாமம்மா! யென்று,
பார்வதியாளை வாரி யெடுத்து, மணி முகத்தை
முத்தமிட்டு, கட்டி யெடுத்து கொள்ளை
முத்தம் தந்தார்.

பார்வதி. 'அண்ணா! இதுதான், எனக்கு கடைசி முத்தம்,
இனி, நான் உங்களை பார்க்கப் போவதில்லை.'

சி. சாமி. ஏன், தங்கமே! இப்படிச் சொல்கிறாய்? நாங்
கள், சீக்கிரம் வந்து விடுவோம்.'

பார்வதி. 'அண்ணா! இனி, நீங்கள் திரும்பி வர முடியாது!
என்று, எனக்குத் தெரியும்! சரி, போய் விட்டு
வாருங்கள்' என்றாள்.

சி. சாமி 'சரி, தங்கமே! நாங்கள் போய் விட்டு வருகிறோம்!
அடிக்குட்டி! பார்வதியாளை, ஜாக்கிரதையாக

பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டு, சாமி இருவரும் வெளியே வந்து.

சி.சாமி. அடே, சாம்புகா! நீ, பன்னிகுத்தும் பாரவேலை எடுத்துக் கொண்டு, குடிபடைகளை ஜாக்கிரதை யாகக் கூட்டிக் கொண்டு, வா! நாங்கள் முன்னால் செல்கிறோமென்று, சாமி இருவரும் மாயவரை நினைத்து, இருவரும் நிலாவில் ஏறினார்கள்.

பாட்டு

"ஏறினார் என்சாமி நிலாவில்
எடுத்தடிச்சார் என்சாமி பொன்சிலுக்கை.
தாண்டினார் என்சாமி நிலாவில்
துனிச்சடிச்சார் என்சாமி ரணசிலுக்கை.
வலது காலே என்சாமி மெட்டியதும்
வைகுந்தம் நிலா பாயுதுபார்.
இடது காலே என்சாமி மெட்டிடதும்
தெய்வலோகம் நிலா பாயுதுபார்.
கல்லை கல்லைக் கடக்குதுபார்
கருமலையை நிலாவும் தாண்டுதுபார்.
பில்லே பில்லைக் கடக்குதுபார் நிலா
பிலி மலையை என்சாமி தாவுதுபார்.
நாகமலை என்னுத்தா தோகமலை.
நாலெட்டம் என்சாமி சூல்கிரிமலை.
சித்தி சித்திப்பபார்ந்த மலை
சூர்த்துள்ள என்சாமி வீரமலை.
வீரமலை என்சாமி தேடியல்லோ
மையமா நிலா வருகுதுபார்."

சாமி இருவரும் வீரமலை வந்து நீலாவை
விட்டு இறங்கி, சிறிது நேரத்தில், சாம்புகன்
குடிபடைகளைக் கூட்டிக்கொண்டு வீரமலை
வந்து சேர்ந்தான். சாம்புகன், நீலாவை பிடித்
துக் கட்டி விட்டு, வெள்ளிக் கூடாரம் அடி
த்து, சாமி இருவரையும் கூடாரத்தில் படு
க்கச் சொல்லி விட்டு, குடிபடைகளை கூடா
ரத்தை சுற்றியும், உட்கார வைத்தான்.) 254

255 ((வீரமலையில்) இப்படியிருக்கும் போது,
பொன்னிவள நாட்டில், அரண்மனையிலுள்ள
பொன்னாச்சி என்ற நாய்! 'நம்ம, ராஜாவும்,
பறையனும், நம்மளை கொஞ்சங் கூட நினைக்
காமல், பெரிய, பெரிய நாய்களை கூட்டிப்
போகிறோம் என்று, கர்வத்தில், நாம்
ஒரு சாண் உயரம் இருப்பதால், நம்மளை
சண்டைக்கு கூட்டிப் போகாமல் விட்டு
விட்டுப் போய் விட்டார்கள்' என்று பொன்
னாச்சிக்கு கோபம் வந்து, சாபம் கொடுக்
க நினைத்து, செல்லாத்தா கோவிலுக்குப்
புறப்பட்டது.

பாட்டு:

"ஓட்டம் என் சாமி பெருநடையா
ஒருவிளைவாய் பொன்னாச்சி வருகுதுபார்
வண்டோட்டம் என்சாமி வெகு விளைவாய்
வருகுதுபார் என்சாமி பொன்னாச்சி."

— - — - — - — - — - —

569.

பொன்னுச்சி, செல்லாத்தா கோவிலுக்கு வந்து, காசிக்கரையில் இறங்கி, குளித்துவிட்டு வந்து, கோவில வலம் வந்து கும்பிட்டு, பிறகு, செல்லாத்தா முன் நின்று,

பாட்டு

பொன்னுச்சி. "கோவிலிலே செல்லாத்தா
இருக்கிறயோ அம்மா இருக்கிறயோ.
குடியோடி நாட்டிலே
போயிட்டியோ அம்மா போயிட்டியோ.
மாடியிலே செல்லாத்தா
இருக்கிறயோ அம்மா இருக்கிறயோ
மாடி விட்டு செல்லாத்தா
போயிட்டியோ அம்மா போயிட்டியோ."

---

தாயே, செல்லாத்தா! காரனும் வரத்தில் தான் பிறந்தான்! நானும் வரத்தால் தான் பிறந்தேன்! அந்தப்பன்றியாகிய கொம்பனை கொல்வதற்க்கென்றே, என் தாயார் வரம் வாங்கி வந்து, அதற்க்காகவே நான் பிறந்தேன்! அப்படியிருக்க, காரானும், பறையனும், ஐந்து கோடி படையையும், ஐயாயிரம் கோம்பை நாய்களையும் கூட்டிப் போகிறோமென்று, என்னை மதிக்காமல் போய் விட்டார்கள்; நான் போகாமல் அவர்கள் கொம்பனைக் கொல்ல முடியுமா? அதனால்,

அந்தக்காரனுக்கு, வீரமலையில்
கத்தியெடுக்க கால்பலமில்லாமல்,
ஈட்டியெடுக்க எதிர்ப்பலமில்லாமல்,
போக வேண்டும், செல்லாத்தா! என்று, பொன்
னாச்சி மாரடித்து அழுது, சாபம் கொடு
த்து விட்டு, பிறகு புறப்பட்டு, பிள்ளையார்
கோவில் வந்து, ஒரு கல்லின் அடியில்
ஒரு ஊளக்குழி தோண்டி, உள்ளே படுத்
துக் கொண்டாள்.

(இப்படியிருக்கும் போது) வீரமலையில்,
காளி கொடுத்த சாபம் கடக்கப் போய் நின்று,
முனி கொடுத்த சாபம் முன்னே போய் நின்று,
சாமி, சின்ன அண்ணருக்கு, காய்ச்சலும், குளி
ரும் ஏற்பட்டு, கத்தியெடுக்கக் கூட
பலமில்லாமல் தள்ளாடினார்.

சி. சாமி. 'அண்ணா! நம்ம, ஈங்கியில்லா நாட்டுக்கு,
இன்று ஈங்கி வந்து நேர்ந்திட்டதே!
நாம் பன்றி மேல் சண்டைக்கு போகிறோம்
என்று, படைதிரட்டி வந்து, இப்போ என
க்கு பழி வந்து நேர்ந்திட்டதே, அண்ணா!'
என்று, சின்னண்ணா சாமி மனம் தளர்ந்து,
அழுதார்.

571,

பெ.சாமி. 'வாண்டா மடா, பொன்னையா! அஞ்சவேண்டாம்! வரும் வினை வந்தால், வழியிலும் தங்காது.') 255

256 ( பாட்டு

"ஆனை ஆனைப்படையிலே ஐயோ படையிலே
இனி ஆனி வந்து சூழ்ந்திட்டுதே
அய்யோ சூழ்ந்திட்டுதே

குதிரை குதிரைப்படையிலே அய்யோ படையிலே
கொடிவேங்கை கொடிவேங்கை சூழ்ந்திட்டுதே
அய்யோ சூழ்ந்திட்டுதே.
எண்ணை எண்ணைக்குடத்திலே
அய்யோ குடத்திலே தான்
எறும்பு வந்து சூழ்ந்திட்டுதே
அய்யோ சூழ்ந்திட்டுதே.
தண்ணி நல்லோ தண்ணிக்குடத்திலேதான்
தவளை வந்து சூழ்ந்திட்டுதே
அய்யோ சூழ்ந்திட்டுதே."

---

பெ.சாமி. 'பொன்னய்யா! உனக்கு காய்ச்சல் வந்து விட்டது, இனி, எப்படி பன்றி மேல் சண்டை செய்வது? தம்பி, ஊருக்குப் போய் விடலாமா, சாமி?'

சி.சாமி. 'அண்ணா! போய் விடலாம்; ஆனால், பன்றி,

இங்கு இருப்பதும், இல்லாததும், தெரியவில்லை;
அப்படியிருந்தாலும், நான், கத்தியெடுத்து,
ஒன்றும் செய்ய முடியாது! அப்படி, நாம்
ஊருக்கு திரும்பி போய் விட்டால், பன்றி
நம்மிடம் சொன்ன மூன்று நாளும் இன்று
டன் முடிகிறது! நாம், பன்றியிடம் சண்டை
செய்யாமல் போய் விட்டால், பன்றி நம்
நாட்டுக்கு வந்து, நம்மையும் கொன்று,
அரண்மனையையும், நாட்டையும் அழித்து
விடுவதாக சொல்லியிருக்கிறதே, என்ன
செய்வது? சரி, எதற்கும், பன்றி இங்கு
இருக்கிறதா? வீரப்பூர், போய் விட்டதா?
என்று, சாம்புகனை பார்த்து வரச் சொல்லி,
அவன் வந்து பிறகு யோசிப்போமென்று,
இன்னண்ண சாமி, சாம்புகனை கூப்பிட்டு
'சாம்புகா! நீ, போய், பன்றி வீரமலையில் இருப்
பதும், இல்லாததும், சீக்கிரம் பார்த்துக்
கொண்டு, வா!' என்றார்.

சாம்புகன்: 'சாமி! நல்லது!' என்று, தோட்டித்தடியை
எடுத்துக் கொண்டு, கரிக் கொம்பை
எடுத்து, தோளில் போட்டுக் கொண்டு,

573,

பன்றியைத் தேடிக் கொண்டு, புறப்பட்டான்.

பாட்டு

"பன்றியைத் தேடியல்லோ தேடியல்லோ
வாராரனே பொல்லாத சாம்புகனும்
கொம்பினைக் காணமென்று காணமென்று
கொல்காரன் தேடுகிறான் தேடுகிறான்."

சாம்புகன் பன்றியைத் தேடிக் கொண்டு வரும் போது, வீரமலையின், ஒரு மலையில், மூன்று கல், ஒன்றின் மேல், ஒன்றாக அடுக்காக இருந்தது. அதன் மேல், ஒரு பின்னமரம் இருந்தது. அதைக் கண்ட சாம்புகன், 'பன்றியை, எங்கும், காணும்! இந்த மரத்தடியில், சிறிது நேரம் வெய்யலுக்கு தூங்கியிருந்து, போகலாமென்று, மரத்தின் நிழலில் போய் உட்கார்ந்தான். சாம்புகன் சிறிது நேரமிருந்து, பிறகு, புறப்படலாமென்று நினைக்கும் போது, அவன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு கிழபுறம், கொஞ்ச தூரத்தில், ஒரு கிணற்று அருகே, குழி தோண்டி, பன்றி அதில் படுத்துக் கொண்டு, 'இன்று காராளனை சண்டைக்கு வரச் சொல்லியிருந்தோம்,

வந்தானோ! வரவில்லையோ! தெரியவில்லை,
போய் பார்க்கலாமென்று, கொம்பன் எழுந்து
வெளியில், புறப்படும் போது, ஒரு மூச்சு விட்
டது. அந்த மூச்சு வந்த வேகம், பின்ன மரம்
சலசலவென்று ஆடியது. அதைப்பார்த்து
சாம்புகன், இதென்ன, ஆச்சரியமாக இருக்
கிறது! காற்று கொஞ்சங்கூட அடிக்க
வில்லை, மரம், எப்படி நடுங்கிறது! என்று,
சாம்புகன், கிழக்கு திரும்பி பார்க்கும்
போது, கொம்பன் மேலே வந்து நின்று
கொண்டு, சாம்புகனைப்பார்த்து குரூர
சிரிப்பு சிரித்துக் கொண்டு 'அடே!
நீ யார்?' என்று, கேட்டது.) 256

257( சாம்புகன் பதில் பேசவில்லை.

பன்றி. 'ஏண்டா! நான் கூப்பிடுவது, காது,
கேட்கவில்லையா?'

சாம்புகன் இதற்கும் பதில் பேசவில்லை.

பன்றி. 'ஏண்டா, டேய்! பேசுவாயா? இல்லை உன்னை
கொல்லட்டுமா?' என்றதும், சாம்புகன்
அப்பதான் காது கேட்டது போல், மேலே
எழுந்து, 'சாமி! சாமி!! நமஸ்காரம்!' என்றான்.

பன்றி. 'அடே, பொடியா! நமஸ்க்காரம்! இருக்கட்டும், நீ, எந்த ஊர், சொல்?

சாம்புகன். 'கொம்ப, ராஜாவே! எனக்கு, காது சரியாக கேட்பதில்லை, எந்த ஊர், என்று கேட்டீர்கள்? சொல்கிறேன் கேளுங்கள், சாமி!

நல்லி வளர்ந்தோங்கும், நெல்லி வள நாடு,
செல்வம் நிறைந்தோங்கும், பொன்னி வள நாடு.

சாமி! நான், பொன்னி வள நாடு, பறையனுங்கோ!

பன்றி. 'ஏண்டா, பறையா! காராளனுக்கு, முதல் மந்திரி, நீ, தானா?'

சாம்புகன். 'ராஜாவே! ஆமாங்கோ!'

பன்றி. 'ஏண்டா, பறையா! நீ தாண்டா, என்னுடைய வீரதுங்கா மந்திரியிடம் வந்து, இரும்பை வாங்கிக் கொண்டு போய் வேலை செய்து, எங்க நாட்டில் வந்து, கிளியையும் பிடித்துக் கொண்டு போனவன், நீ, தாண்டா? பறையா!'

சாம்புகன்' ஆமாங்க, ராஜாவே! அந்த விழுல வரத்தான், இப்போது, எனக்கு கஷ்டம் வந்தது, காராளன், இப்படிச் செய்வான் என்று, நான் முதலில் நினைக்க வில்லை.'

பன்றி. 'ஏண்டா, பறையா! அப்படி என்னடா, கஷ்டம் வந்து விட்டது?'

சாம்புகன். 'ராஜாவே! நான் இரும்பை வாங்கி வந்து, வலைசெய்து
கிளியைப் பிடித்துக் கொண்டு வந்தது, உண்மை
தான்! பிறகு, இந்த நான்கு நாட்களுக்கு முன்,
காராளனிடம், வீரப்பூருக்கு இரும்பை கொண்
டு போய் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன்,
அதற்கு, காராளன், ஏண்டா, பறையா! எங்களு
க்கு கொடுக்கத் தெரியாதா? நீயென்னடா,
கேட்பது? என்று, என்னை அடித்து துரத்தி
விட்டான்! அவன் அடித்த அடியில், என்
உடம்பெல்லாம் வலியேற்பட்டு, இந்த நான்கு
நாட்களாக வேது பிடித்துக் கொண்டிருந்தேன்;
இன்று, என் தாயார், என்னிடம், மகனே! வீர
மலையில், கொம்பராஜா! வந்திருக்கிறாராம்!
நம்ம ராஜாவெல்லாம், கொம்ப ராஜாமேல்
சண்டைக்கு போகிறார்களாம்! என்றாள்.
நான் உடனே தங்களிடம் வந்து சேர்ந்து,
காராளன் என்னை அடித்ததற்காக, அவனை
பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று,
தங்களை தேடிக் கொண்டு வீரமலைக்கு
வந்து, தங்களைக் காணாமல், இந்த மரத்
தடியில் உட்கார்ந்தேன்; தாங்கள் அந்தக்
குழிக்குள் இருந்தது, எனக்குத் தெரியாது!

577.

தாங்கள் மேலே வரத்தான் தெரிந்தேன், ராஜாவே! தங்களைக் கண்டதும்! எனக்கு இன்பம் குளிர்ந்து, இருதோளும் பூரிக்கின்றேன்!' என்றான். 257

258 பன்றி: 'ஏண்டா, பறையா! என்னை ஏமாற்றலா மென்று நினைத்து, தந்திரம் செய்கிறாயா? காரளன், உன் பேச்சை மீறி நடப்பதில்லை யென்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்! நீ, அவன் மேல், பழி சுமத்திப் பேசுகிறாயே?'

சாம்புகன்: 'ராஜாவே! இது நாள் வரை, அப்படித்தான் இருந்தது; ஆனால், அவன் என்னை அடித்து பிறகு, அவனை பழி வாங்க வேண்டு மென்று தான், தங்களைத் தேடிக் கொண்டு இங்கு வந்தேன், ஏனுங்கோ, ராஜாவே! தங்களிடம், எதற்கு நான் பொய் சொல்லுகிறேன்?'

பன்றி: 'சரி, நல்லது! ஏண்டா, பறையா! தோளில் என்னமோ போட்டிருக்கிறாயே! என்ன?'

சாம்புகன்: 'ராஜாவே! அது, கொம்புங்கோ!'

பன்றி: 'ஏண்டா! கொம்பு, நன்றாக வாசிப்பாயா?'

சாம்புகன்: 'சாமி! அமோகமாக, வாசிப்பேன்.

578.

பன்றி. சரி, நல்லது! நான் போய், சிறிது நேரம் படுத்து தூங்குகிறேன், நீ, கொம்பை வாசி என்று, சொல்லி விட்டு, பன்றி குழிக்குள் போய் படுத்துக் கொண்டது.

சாம்புகன் கொம்பை எடுத்து, மாயவனை நினைத்து வாசிக்க ஆரம்பித்தான்.

சாம்புகன். கொம்பு, பாட்டு —

"ஏரி ஏரி ரா ரா ரோ
சாமி நீ ஏரி ஏரி ஏரா ரோ.
வரத்தால் பிறந்தவர்கள் சாமி, நீ.
வான் வீமா வந்திட்டீரோ.
தவத்தால் பிறந்தவர்கள் சாமி, நீ.
தாட்டியரும் வந்திட்டீரோ.
குன்னுடையார் பெற்றெடுத்தோ
சாமி நீ இந்சரமே வந்திட்டீரோ.
தாமரையா, பெற்றெடுத்தோ சாமி, நீ.
தாட்டியரும் வந்திட்டீரோ.
பங்காளியை சங்கரித்து சாமி, நீ.
பழிகாரா வந்திட்டீரோ.
கொம்பனை சங்கரிக்கோ சாமி, நீ
குலகாரா வந்திட்டீரோ.
பன்றியை சங்கரிக்கோ சாமி, நீ
பழிகாரா வந்திட்டீரோ.
கொம்பனை குத்தியல்லோ சாமி, நீ
கடை சேர்ந்து போடுவீரோ."

579.

சாம்புகன், இப்படி பாட்டுச் சொல்லி வாசிப்
பதைக் கேட்ட பன்றி, கோபத்துடன் மே
லே வந்து நின்று, 'அடே, பறையா! குழலில்,
என்ன சொல்லி வாசித்தாய்? கொம்பனை
சங்கரிக்க, கெலகாரா, வந்திட்டியா!
கொம்பனைக் குத்தி, கூடவே போடுவேனோ!
என்று, வாசித்தாயே? ஏண்டா! காரானைக்
கூட்டி வந்து வைத்து விட்டு, நீ, வேவு
பார்க்க வந்தாயா? பறையா!' என்றது.

சாம்புகன். 'ராஜாவே! நான், அப்படி வாசிக்கவில்லை;
நான் வாசித்தது, கொம்பராஜாவும், நானும்
வந்து விட்டோம்; உங்களைக் கொன்று
கூடவே போடுகிறோம் என்று வாசித்
தேன், கொம்பு, வளைந்து இருப்பதால்,
பாட்டு, அந்த வளைவில் திரும்பி வரும்
போது, தங்களுக்கு அப்படிக் கேட்டிரு
க்கிறது; ஏனுங்கோ, ராஜாவே! நான்,
உங்களைக் கொல்ல வேணுமென்று, வாசி
ப்பேனா?' 258

259 பன்றி. ஓகோ! அப்படியா, சரி நல்லது! இன்னும்,
கொஞ்ச நேரம் வாசியென்று, மறுபடியும்
போய் படுத்துக் கொண்டது.

சாம்புகன் பன்றி போய் படுத்து சிறிது நேரம்
ஆன பின், சாம்புகன் எழுந்து போய், பன்றி
தூங்கிவிட்டதா? என்று, குழிக்குள் எட்டிப்
பார்த்தான். அப்போது, பன்றி, நன்றாக
தூங்கிக் கொண்டிருந்தது. சாம்புகன்,
இதுதான் சமயமென்று, மெதுவாக குழிக்
குள் இறங்கி, பன்றியின் முதுகின் மேல்
நின்று, குலுக்கிப்பார்த்தான். பன்றி அதற்கு
அசையவில்லை. நன்றாக, தூங்கிக் கொண்டி
ருந்தது கண்டு, சாம்புகன் பன்றியின் ஒன்பது
ரோமத்தை (மயிர்) கையில் சுற்றி, வெடுக்
கென்று, பிடுங்கிக் கொண்டு, ஒருதாவில்
குழியை விட்டு மேலே வந்து-

பாட்டு:

"எட்டியே என் சாமி தாண்டுறானே
பாரமுள்ள என்னத்தா சாம்புகனும்
தாண்டித் தாண்டிக் குதிக்கிறானே
தைரியங்கள் என்னத்தா உள்ளமட்டும்"

---

சாம்புகன், ரோமத்தை பிடுங்கிக் கொண்டு,
ஓடுவதைக் கண்ட, பன்றி, 'ஏண்டா, பறையா!